இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 787/2021

கப்தான் சிங் ... மேல்முறையீட்டாளர்

எதிர்

உத்தரப்பிரதேச மாநில அரசு மற்றும் பலர் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு.எம்.ஆர்.ஷா

1. கான்பூர் நகர், முதல் கூடுதல் தலைமை பெருநகர நடுவரின் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள, கான்பூர் நகர் மாவட்டம், பாரா காவல்நிலையத்தில் இ.த.ச., பிரிவுகள் 147,148,149,406,329 மற்றும் 386-இன் கீழான குற்றவியல் வழக்கு எண் 3302/2015-இல் உள்ள ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் பிரிவு 482-இன் கீழான விண்ணப்ப எண் 1697/2016-இல் அலகாபாத் உயர்நீதிமன்றம், கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்தி நீக்கியதால், அந்த உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 29.7.2020-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவினால் திருப்தியடையாமல் மனக்குறையுற்று முதன்மை முறையீட்டாளர் இந்தமேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

2. இதிலுள்ள மேல்முறையீட்டாளர், இ.த.ச., பிரிவுகள் 147, 148, 149, 406, 329 மற்றும் 386-இன் கீழான குற்றங்களுக்காக தனிப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக கு.வி.மு.ச., பிரிவு 156(3)-இன் கீழ் அறிவார்ந்த நடுவர் நீதிமன்றம் முன்பாக ஒரு முறையீட்டைத் தாக்கல் செய்தார்; கான்பூர் நகர் கற்றறிந்த கூடுதல் தலைமை பெருநகர நடுவர், விண்ணப்பத்திலும்/முறையீட்டிலும், ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்ட சங்கதிகளை ஆய்வு செய்தபிறகு, இது முதல் நோக்கிலேயே கைது செய்வதற்குரிய குற்ற வழக்கு எனக் கண்டறிந்தும்,

காவல்துறையினர் இதனை விசாரிக்கவேண்டியுள்ளது என்று கருத்துரைத்தும், 7.9.2015-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் கு.வி.மு.ச., பிரிவு 156(3)-இன் கீழ் மேற்படி விண்ணப்பத்தை அனுமதித்து, முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்து, அதனை சட்டத்திற்குட்பட்டு புலனாய்வு செய்ய சம்பந்தப்பட்ட காவல்நிலைய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

2.1. அதன் பிறகு, சம்பந்தப்பட்ட காவல்நிலைய அதிகாரி, இ.த.ச.,பிரிவுகள் 147,148,149,406,329 மற்றும் 386-இன் கீழான குற்றங்களுக்காக இதிலுள்ள தனிப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக வழக்கு குற்ற எண் 0645/2015-ஆக மு.த.அ.-ஐ பதிவு செய்தார். மு.த.அ.-இல் உள்ள குற்றச்சாட்டுகளின்படி, முன்னிதேவி என்பவர் தாமோதர் நகர், 2 யோஜ்னா ஜீஹிகாலா, டபிள்யூ. பிளாக்கில் உள்ள 387 சதுரடி பரப்பளவுடைய மனை எண் 1342-இன் உரிமையாளராவார், மேற்படி மனையைக் கவனித்துக்கொள்ள அவர், தனது முறையீட்டாளரான கப்தான் சிங்குக்கு பகர அதிகாரமளித்து நியமித்தார். முன்னிதேவி மேற்படி மனையை விற்க விரும்பினார்; அவர், மொத்த விற்பனைத் தொகையான ரூ.25,00,000/-க்கு 27.10.2010 அன்று இதிலுள்ள 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான மம்தா குப்தாவுடன் பதிவு செய்யப்பட்ட விற்பனை உடன்படிக்கையைச் செய்துகொண்டார்; உடன்படிக்கை சமயத்தில் வாங்குநரான மம்தா குப்தா, கான்பூர், கோவிந்த் நகர் கிளை, ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் வரையப்பட்ட, ஒவ்வொன்றும் ரூ.2 இலட்சம் கொண்ட ஐந்து காசோலைகளை ஒப்படைத்தார்; முன்னிதேவி, அவரது வங்கியில் 15.11.2010-ஆம் தேதியிடப்பட்ட காசோலை ஒன்றின் எண் 502314-ஐ முன்னிலைப்படுத்தினார்; மேற்படி காசோலை "போதிய நிதியில்லாமை காரணமாக" மதிப்பு மறுக்கப்பட்டது; காசோலை பணமாகாமல் திரும்பி விட்டதால், முன்னிதேவி, மம்தா குப்தாவை தொடர்பு கொண்டார்; பின்னர் அவர், தனது கணவர் சிறுநீரகக் கோளாறினால் அவதிப்படுவதாகவும், நிதிப்பிரச்சினையை எதிர்கொள்வதாகவும், அதனால் மேற்படி மனையை வாங்க இயலவில்லையென்றாலும், அவர் பணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகவும் அவருக்கு(முன்னிதேவிக்கு) தகவல்

தெரிவித்தார்.அதன் பிறகு மம்தா குப்தா கிரையப் பத்திரம் பதிவு செய்வதற்கு அக்கறை ஏதும் காட்டவில்லை, மேலும் அவர், முன்னிதேவியிடம் காசோலைகளை முன்னிலைப்படுத்த வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொண்டார்; அதன் பிறகு முன்னிதேவி, பதிவுத்தபால் மூலமாக 2.1.2015 மற்றும் 18.5.2015-ஆம் தேதியிடப்பட்ட சட்ட அறிவிப்பை அனுப்பினார்; 18.5.2015-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பைப் பெற்ற பிறகும், மம்தா குப்தா ஆக்கப்பூர்வமாக பதில் ஏதும் அளிக்கவில்லை, பின்னர் முன்னிதேவி, 5.8.2015 அன்று முறையீட்டாளருக்கு பகர அதிகாரமளித்து நியமித்துக் கொண்டார்.

22. அதன் பிறகு, முறையீட்டாளர் தனது தோழன் இராம் பிரதாப் சிங்குடன் 20.8.2015 அன்று மனைக்குச் சென்ற சமயத்தில் மம்தா குப்தாவும், அவரது கணவரும், தகர கொட்டகைக்கு வெளியே வேறு மூன்று நபர்களோடு இருந்தனர் என சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் முழு விற்பனைத் தொகையையும் செலுத்தாமல் அறையை வலுக்கட்டாயமாகப் பூட்டுப் போட்டு விட்டுச் சென்றுவிட்ட தாகவும் அந்தப் பூட்டைத் திறந்துவிடுமாறும் அவர்களை முறையீட்டாளர் கேட்டுக்கொண்டார்.அச்சமயத்தில், அவர்கள் ரூ.2 இலட்சம் செலுத்தியிருந்ததாகவும், ரூ.10 இலட்சம் கிடைக்கும் வரையில் அவர்கள் பூட்டைத் திறக்கமாட்டார்கள் எனவும் அவர்களிடம் மம்தா குப்தாவும், அவரது கணவரும் கூறினர். அனைத்து நபர்களும், முறையீட்டாளரை அவரது தாயார் மற்றும் சகோதரியோடு இணைத்து தகாதவார்த்தை பேசி, அவரை திட்டி, முறையீட்டாளரை பிடித்துத் தள்ளியதால் அவர் கீழே விழுந்தார். அதன் பிறகு அவரை கை முட்டியால் இடித்தனர், மம்தா குப்தா, அவரது மார்பு மீது கத்தி போன்ற ஓர் ஆயுதத்தின் ஓரப்பகுதியை வைத்து, ஒரு வெற்றுத்தாளைக் கொடுத்து, அதில் கையெழுத்திடுமாறும், இல்லாவிட்டால் முறையீட்டாளரை கொன்று விடுவதாகவும் மிரட்டினார் எனவும் சொல்லப்பட்டது. முறையீட்டாளர் மருத்துவ அறிக்கையையும் முன்னிலைப்படுத்தினார்.அதன் பிறகு, புலனாய்வை முடித்த பின், சாட்சிகளின் வாக்குமூலத்தையும், முறையீட்டாளரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்த பின்னர், சம்பவ இடத்திலிருந்து சான்றினை சேகரித்து, தனிப்பட்ட சாட்சிகளின்

வாக்குமூலத்தையும், மேலும் எதிரிகளின் வாக்குமூலத்தையுங்கூட எடுத்துக் கொண்டபின், உரிய விசாரணைக்குப் பிறகு,இ.த.ச., பிரிவுகள் 147, 148, 149, 406, 329 மற்றும் 386-இன் கீழான குற்றங்களுக்காக எதிரிகளுக்கு எதிராக ஒரு முதல் நோக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனத் திருப்தியடைந்து, புலனாய்வு அதிகாரி, மேற்சொன்ன குற்றங்களுக்காக இதிலுள்ள தனி எதிர் மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக 26.11.2015-ஆம் தேதியிடப்பட்ட குற்ற அறிக்கை எண் 320/2015-ஐ தாக்கல்செய்தார்.

2.3. அதன்பிறகு, கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் குற்றவியல் நடவடிக்கைகளை நீக்குவதற்காக இதிலுள்ள தனி எதிர்மேல்முறையீட்டாளர்கள் உயர்நீதிமன்றத்தை அணுகினர். பிரச்சினை உரிமையியல் தன்மையானது என்பதும், முன்னிதேவி, வாங்குநரான மம்தா குப்தாவுடன் 27.10.2010 அன்று விற்பனை உடன்படிக்கை செய்து பதிவு செய்து கொண்டார் என்பதும், முன்னிதேவி மேற்சொன்ன மனையை வில்லங்கமற்ற நிலமாக்கித் தருவதாக உறுதி அளித்தார் என்பதும், அதன் பிறகு மம்தா குப்தா சார்பாக கிரைய ஆவணம் நிறைவேற்ற உடனடியாக பகுதித் தொகை காசோலையாகவும், பணமாகவும் கொடுக்கப்பட்டு, மீதத்தொகையான ரூ.10 இலட்சம் கிரைய ஆவணம் நிறைவேற்றும் சமயத்தில் செலுத்த வேண்டும் என்பதும், அதே நாளன்று மம்தா குப்தா மற்றும் முன்னிதேவியின் கூட்டுச் சான்றளிக்கப்பட்ட பிரமாணப்பத்திரம், மம்தா குப்தாவால் ரூ.25 இலட்சம் கொடுக்கப்பட்டு, மம்தா குப்தாவுக்கு உடைமை மாற்றம் அளித்ததை விளக்கி நிறைவேற்றப்பட்டது என்பதும், மம்தா குப்தா உடைமையைப் பெற்றுக் கொண்டபின் மேற்படி மனையில் இரு அறைகள் கொண்ட ஒரு கட்டுமானத்தைக் கட்டினார் என்பதும் 482-இன் படியான மனுவிலுள்ள எதிரிகளின்-இதிலுள்ள தனி எதிர்மேல்முறையீட்டாளர்களின் தரப்பிலான வழக்கு விவரமாகும். அதன் பிறகு முன்னிதேவி நிலத்தை வில்லங்கமின்றி நிறைவேற்றிப் பெறவில்லை என்பதும், மம்தா குப்தாவின் கணவர் சிறுநீரக பாதிப்பால் அவதியுற்று, இரத்த சுத்திகரிப்பு (டயாலிசிஸ்) செய்து வந்ததால், குறித்த வகை நிறைவேற்றத்திற்கான சட்ட நடவடிக்கைகளை அவர் தொடங்க முடியவில்லை என்பதும், அதன் பிறகு முன்னிதேவி கான்பூர் நகர்

உரிமையியல் நீதிபதி(முதுநிலைப்பிரிவு) அவர்களின் நீதிமன்றத்தில் ஓர் உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார் என்பதும் எதிரிகளின் தரப்பிலான வழக்கு விவரமாகும். முன்னிதேவி, கீழமை நீதிமன்றத்திடமிருந்து பரிகாரம் எதனையும் பெறவில்லை, அவருக்கும் இதிலுள்ள மேல்முறையீட்டாளரான முதன்மை முறையீட்டாளருக்கும் நிலமோசடி கும்பலுடன் தொடர்பிருந்தது என்பதும், அவருக்கு முன்னிதேவி பகர அதிகாரமளித்தார் என்பதும் அவர் 20.8.2015 அன்று மனையைப் பார்வையிடச் சென்ற போது தாக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டார் என்பதும் எதிர்மேல்முறையீட்டாளர்களான எதிரிகளின் தரப்பிலான வழக்கு விவரமாகும். அதன்பிறகு மம்தா குப்தா, கான்பூர் நகர் உரிமையியல் நீதிபதி (முதுநிலைப்பிரிவு) அவர்களின் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக அசல் வழக்கு எண் 2077/2015 என்ற உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார், அதில், மம்தா குப்தாவுக்கு ஆதரவாக தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டிருந்தது, மேற்படி உத்தரவு இதுவரையிலும் நடைமுறையிலுள்ளது.ஆகவே, இப்பிரச்சினை முற்றிலும் ஓர் உரிமையியல் தன்மையுடையது என்றும், மம்தா குப்தா பிரச்சினைக்குரிய மனையின் உரிமையாளருக்கு தொகை ரூ.25 இலட்சத்தைச் செலுத்தியிருந்தபோதிலும், முறையீட்டாளரிடம் மனையை ஒப்படைப்பதற்கு மம்தா குப்தாவுக்கு நெருக்கடி கொடுக்கும் பொருட்டே குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் வாதிடப்பட்டு உள்ளது. ஆகவே, ஒட்டுமொத்த மு.த.அ.-ஐயும் நீக்குவதற்கு வேண்டுரைக்கப்பட்டது

3. 482-இன் கீழான மனு முதன்மை முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்டது. ஒரு விரிவான பிரமாணப்பத்திரம்/எதிர்பிரமாணப்பத்திரம் முதன்மை முறையீட்டாளரின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டது. 27.10.2010 அன்று மம்தா குப்தா சார்பாக முன்னிதேவியால் நிறைவேற்றப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் ஆவணங்கள்/பின்னிட்டு கூட்டுச் சான்றுறுதி அளிக்கப்பட்ட 27.10.2010-ஆம் தேதியிடப்பட்ட ஆவணம் பொய்யாகப் புனையப்பட்டுள்ளன, அதில் ரூ.25 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், உடைமை மம்தா குப்தாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.அவர்களுக்கெதிராக பதிவு செய்யப்பட்டுள்ள

மற்றொரு முதல் தகவல் அறிக்கை 4.12.2015 அன்று, கான்பூர்நகர் மாவட்ட பாரா காவல் நிலையத்தில் இ.த.ச., பிரிவுகள் 420, 467, 468, 471-இன் கீழ்குற்றவழக்குஎண் 816/2015-ஆக பதிவு செய்யப்பட்டது, அதன் விசாரணை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. மம்தா குப்தாவால் மோசடியான முறையில் மின் இணைப்பு பெறப்பட்டது, பின்னர் அந்த மின்இணைப்பு கான்பூர் நகர் மின்சாரத்துறையால் 18.8.2015 அன்று நிரந்தரமாக துண்டிக்கப்பட்டது, மேலும் இன்று வரையிலும் பிரச்சினைக்குரிய வளாகத்தில் மின்இணைப்பு இல்லை என்றும் பணிந்துரைக்கப்பட்டது. புலன் விசாரணை முடிந்த பிறகும், எதிரிக்கு எதிராக நம்பத்தக்க சான்றினைச் சேகரித்த பிறகும், புலனாய்வு அலுவலர் குற்ற அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளார். கற்றறிந்த நடுவர் மிகக் கவனமாக மனதைச் செலுத்தி எதிரிக்கு எதிரான வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளார். ஆகவே, 482-இன் படியான விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கப்பட்டது.

4. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம், உயர்நீதிமன்றம் மேற்படி விண்ணப்பத்தை அனுமதித்து, முதன்மை முறையீட்டாளரான கப்தான்சிங், அனைத்து நடைமுறை நோக்கங்களுக்காக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வெளியாளாகவும், அயலாளாகவும் தரப்படுத்தப்படுவதால் அவரது கட்டளையின்படி தொடங்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தமுடியாது என்ற காரணங்களின் பேரில் முக்கியமாக ஒட்டுமொத்த குற்றவியல் நடவடிக்கைகளையும் நீக்கி உள்ளது; அவரது சார்பாக முன்னிதேவியால் நிறைவேற்றப் பட்ட பகரஅதிகாரப்பத்திரம் ஏதும் எதிர்பிரமாணப் பத்திரத்துடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை; மேலும் இப்பிரச்சினை உரிமையியல் தன்மையுடையது என்றும், தரப்பினர்களுக்கிடையிலான உரிமை வழக்குகள் நிலுவையிலுள்ளன என்றும் முன்னிதேவி மற்றும் மம்தா குப்தாவால் கையொப்பமிடப்பட்ட கூட்டுச் சான்றளிக்கப்பட்ட பிரமாணப்பத்திரத்தின் உண்மைத்தன்மையும், இயல்புத் தன்மையும் உரிமையியல் வழக்கு நடவடிக்கைகளில் பரிசீலிக்கப்படலாம் என்றும், சொத்து ஒப்படைப்பு அங்கு நிகழவில்லை என்றுமான காரணங்கள் இருந்தாலும், இ.த.ச., பிரிவு 406-இன் கீழ் குற்றவழக்கு ஏதும் நிரூபிக்கப்படவில்லை. இ.த.ச., பிரிவு 406-இன் கீழ் எதிரிக்கு எதிராக வழக்கு

ஏதும் இல்லையென கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்ததால், எஞ்சியிருக்கும் வாதங்கள் முக்கிய குற்றச்சாட்டினை உறுதிப்படுத்தும் சான்றேதும் இல்லாமல் அதனை விட்டுவிலகிச் செல்கின்றன எனவும் உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது.

5. உயர் நீதிமன்றம், கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழான அதன் உள்ளுறை அதிகாரங்களைச் செலுத்தி ஒட்டுமொத்த குற்றவியல் நடவடிக்கைகளையும் நீக்கி பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவில் முதன்மை முறையீட்டாளர் திருப்தியடையாமல் மனக்குறையுற்று, இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

6. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உயர் நீதிமன்றம் கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழான அதிகாரங்களைச் செலுத்தி, குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கி பெரும்பிழை புரிந்துவிட்டதாக மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சந்தோஷ் குமார் பாண்டே முனைப்புடன் வாதிட்டுள்ளார். மு.த.அ. தாக்கல் செய்த பிறகு, அதனை புலன்விசாரணை அதிகாரி விசாரணை செய்தார், முழுமையான விசாரணை நடத்தி, சாட்சிகளின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தும், சான்றினை சேகரித்தும், தனிப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களையும், எதிரிகளின் வாக்குமூலங்களையும் பதிவுசெய்து புலன்விசாரணை அதிகாரி விசாரணை மேற்கொண்டும், எதிரிகளுக்கு எதிரான குற்றஅறிக்கையைத் தாக்கல் செய்தார், அதன் பிறகுதான், கற்றறிந்த நடுவர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார் என்னும் சங்கதியை உயர் நீதிமன்றம் மதிப்பிட்டு, பரிசீலித்திருக்க வேண்டும். உயர் நீதிமன்றம், கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழான அதிகாரங்களைச் செலுத்தி, குற்றவியல் நடவடிக்கைகளை நீக்குகையில், மேற்சொன்ன அம்சம் உயர் நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டிருக்கவே இல்லை எனவும் வாதிடப்பட்டுள்ளது.

6.1. விசாரணை சமயத்தில் மட்டுமே பரிசீலிக்கப்படக்கூடிய வாதத்திற்குரிய பிரச்சினைகள் உள்ளன என்பதை மதிப்பிட்டு, பரிசீலிக்க உயர் நீதிமன்றம் தவறிவிட்டதாகவும் வாதிடப்பட்டுள்ளது.

6.2. உயர் நீதிமன்றம், கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழான வழக்கு நடவடிக்கைகளை நீக்குகின்ற கட்டத்தில் குற்றச்சாட்டுகளின் தகுதிப்பாட்டினை ஆராய்ந்ததாகவும் வாதிடப்பட்டுள்ளது. தொடர் தீர்முடிவுகளில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு, கு.வி.மு.ச.,பிரிவு 482-இன் கீழான அதிகாரங்களைச் செலுத்துகையில், உயர் நீதிமன்றம் குற்றச்சாட்டுகளின் தகுதிப்பாடுகளை விரிவாக ஆராயவோ, பரிசீலிக்கவோ தேவையில்லை, அவை விசாரணை சமயத்திலேயே பரிசீலிக்கப்பட வேண்டும். **தினேஷ்பாய் சாந்துபாய்பட்டேல்-எதிர்-குஜராத் மாநில அரசு**, (2018)1 எம்.எல்.ஜெ.(கிரிமினல்)529: எல்.என்.ஐ.என்.டி.2018 எஸ்.சி.23:(2018)3 எஸ்.சி.சி.104; **துருவராம்முரளிதர் சோனார்-எதிர்-மகாராஷ்டிர மாநில அரசு**, (2019)18 எஸ்.சி.சி.191; **சி.பி.ஐ.-எதிர்-அரவிந்த்கண்ணா**, (2019) 10 எஸ்.சி.சி.686; **தெலுங்கானா-எதிர்-மேனேஜிபேட்**, (2019) 19 எஸ்.சி.சி.87; **எக்ஸ் ஒய்.இசட்.-எதிர்-குஜராத் மாநில அரசு**, (2019)10 எஸ்.சி.சி.337ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவுகளின் மீது அதிகமாக சார்வுறப்பட்டுள்ளது.

6.3. **(மேற்கண்ட) எக்ஸ்.ஒய்.இசட்** -எதிர்-குஜராத் மாநில அரசு என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டவாறு, முறையீட்டில் கடுமையாக விசாரிக்கத்தக்க குற்றச்சாட்டுகள் இருக்கிறபோது, கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் உயர் நீதிமன்ற உள்ளுறை அதிகாரங்களைச் செலுத்தி மு.த.அ.-ஐ நீக்கியது முறையல்ல என்று வாதிடப்பட்டுள்ளது

6.4. உரிமையியல் வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பத்தில் முன்னிதேவியால் தொடங்கப்பட்டன, அதன் பிறகு நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவே 2-ஆம் எதிரிஉரிமை வழக்கைத் தாக்கல் செய்தாரேயன்றி, குறித்தவகை நிறைவேற்றத்திற்காக எந்த உரிமை வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. 27.10.2010-ஆம் தேதியிடப்பட்ட கூட்டுச் சான்றளிக்கப்பட்ட பத்திரத்தின்படி முன்னிதேவிக்கு எதிரிகள் ரூ.25 இலட்சம் கொடுத்துள்ளதாகதச் சொல்லப்படுகிறது, அது மோசடியானது என்ற மிகக்

கடுமையான குற்றச்சாட்டுகளும் உள்ளன என்றும் வாதிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஒரே தேதியில் அதாவது 27.10.2010 என்ற தேதியில் இரு ஆவணங்கள் உள்ளன. ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்டதாகும், அதில் விற்பனைத்தொகை ரூ.25 இலட்சம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது, 27.10.2010 என்ற அதே தேதியிடப்பட்ட மற்றொரு ஆவணத்தில் விற்பனைத்தொகை ரூ.35 இலட்சம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் முன்னிதேவிக்கு ரூ.25 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற சங்கதியை, உயர் நீதிமன்றம் மதிப்பீடு செய்து, பரிசீலிக்கத் தவறிவிட்டது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. ரூ.25 இலட்சம் செலுத்தப்பட்டதும், 27.10.2010-ஆம் தேதியிடப்பட்ட கூட்டுச் சான்றளிக்கப்பட்ட ஒப்பந்தம் இருப்பதுங்கூட விசாரணை சமயத்தில் பரிசீலிக்கப்பட வேண்டும் என பணிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆகவே விசாரிக்கத்தக்க கடுமையான பிரச்சினைகள் உள்ளபோது உயர் நீதிமன்றம் குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியதில் நியாயப்படுத்ததப்படவில்லை என பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

7. உத்தரப்பிரதேச மாநில அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.அங்கித் கோயல் மேல்முறையீட்டாளர்-முதன்மைமுறையீட்டாளரை ஆதரித்தார்.

8. தனிப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.அமித் குமார் சிங் இந்த மேல்முறையீட்டை எதிர்த்துரைக்கையில், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உயர் நீதிமன்றம் குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியதில் பிழையேதும் புரியவில்லை என முனைப்புடன் பணிந்துரைத்துள்ளார்.

8.1. உயர் நீதிமன்றத்தால் சரியாகக் கருத்துரைக்கப்பட்டவாறு, இவ்வழக்கு, **ஹரியானா மாநில அரசு -எதிர்- பஜன்லால்**, 1992 சப்ளி.(1)எஸ்.சி.சி.335 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் கருத்துரைத்து தீர்மானிக்கப்பட்டபடி முற்றிலும் விதிவிலக்குகளுக்குள் அடங்குகிறது எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

8.2. இவ்வழக்கில் சொத்தின் ஒப்படைப்பு ஏதுமில்லையாதலால், இ.த.ச., பிரிவு 406-இன் கீழ் குற்றமேதும் புரியப்பட்டிருக்கிறதா? என்னும் கேள்விக்கே இடமில்லை எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. இ.த.ச., பிரிவு 406-இன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் நிறைவு செய்யப்படவில்லை, மேலும், உயர்நீதிமன்றத்தால் சரியாகக் கருத்துரைக்கப்பட்டவாறு, 27.10.2010-ஆம் தேதியிடப்பட்ட ஆவணங்களின் உண்மைத்தன்மை குறித்து உரிமையியல் வழக்கு நடவடிக்கைகளில் பரிசீலிக்கப்பட வேண்டும், அவை குற்றவியல் நடவடிக்கைகளில் பரிசீலிக்கப்பட வேண்டியது இல்லை எனும் போது, உயர்நீதிமன்றம், குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியதில் முற்றிலும் நியாயப்படுத்தப்படுகிறது எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. ஓர் உரிமையியல் பிரச்சினையைக் குற்றவியல் பிரச்சினையாக மாற்ற முயற்சி செய்தால், அது சட்டநடைமுறையைத் தவறாகப் பயன்படுத்துவதாகிவிடும் என்று சொல்வதைத் தவிர வேறொன்றுமில்லை என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

8.3. மேலும், இவ்வழக்கில், இந்நீதிமன்றத்தில் தற்போது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள மருத்துவச் சான்றிதழுங்கூட, உயர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்று வாதிடப்பட்டுள்ளது. ஆகையால் உயர் நீதிமன்றத்தில் மருத்துவ அறிக்கை ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதாலும், மற்றபடி, மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள் சாதாரணமானவையாதலால் மற்ற குற்றங்களுக்கான நிகழ்வு ஏதும் நிரூபிக்கப்படாததாலும், உயர் நீதிமன்றம் சரியாகவே குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியுள்ளது எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

8.4. மேலும், உயர் நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டவாறு, முதன்மை முறையீட்டாளருக்குங்கூட முறையீட்டைத்தாக்கல் செய்யும் உரிமையில்லை, ஏனென்றால் முன்னிதேவியால் நிறைவேற்றப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும்

பகரஆவணம் எதுவும் பதிவில் இடம்பெறவில்லை எனவும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

8.5. மேற்படிவாதிட்டு, மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கப்பட்டுள்ளது

9. அந்தந்த தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் விரிவான வாதங்கள் கேட்கப்பட்டன

9.1. இவ்வழக்கில், கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் உயர் நீதிமன்றம் அதிகாரத்தைச் செலுத்தி,இ.த.ச.,பிரிவு 147, 148, 149, 406, 329 மற்றும் 386 ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்கான குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை நீக்கியுள்ளது என்பது தொடக்கத்திலேயே குறிப்பிடத்தக்கதாகும். உயர் நீதிமன்றம்,கு.வி.மு.ச., பிரிவு482-இன்கீழ் அதிகாரங்களைச் செலுத்தி குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியுள்ளபோது, அதற்கு முன்னதாகவே புலனாய்வு அதிகாரி, சாட்சிகளின் வாக்குமூலங்களையும், முறையீட்டாளரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தும், சம்பவ இடத்திலிருந்து சான்றினைச் சேகரித்தும், தனிப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களையும், எதிரிகளின் வாக்குமூலங்களையும் எடுத்துக்கொண்ட பின், கற்றறிந்த நடுவர் முன்பாக இ.த.ச., பிரிவுகள் 147, 148, 149, 406, 329 மற்றும் 386-இன் கீழான குற்றங்களுக்காக குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார், கற்றறிந்த நடுவர் அவர்களுங்கூட அதிகார வரம்புக்குட்பட்டு விசாரணையை எடுத்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். புலனாய்வு/விசாரணையின் போதும், வாக்குமூலங்கள் பதிவு செய்தபோதும் திரட்டப்பட்ட சான்றாதாரங்களை உயர் நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதாக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து தெரியவில்லை.கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழான மனு, மு.த.அ.நிலையிலிருந்தால், அந்நேர்வில், மு.த.அ./புகாரில் உள்ள குற்றச்சாட்டுகளை பரிசீலிப்பதோடு, அது ஒரு கைது செய்வதற்குரிய குற்றமாகத் தெரிகிறதா? இல்லையா? என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.எனினும், வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டு, சான்றாதாரங்கள் திரட்டப்பட்டு, புலனாய்வு/விசாரணை முடிந்ததும், குற்றஅறிக்கை தாக்கல்

செய்த பிறகு, வழக்கு வேறு நிலைக்குச் சென்றுவிடுகிறது, மேலும், புலனாய்வின் போது சேகரிக்கப்பட்ட சான்றினை/சாட்சியத்தை நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும்.இந்தநிலையிலுங்கூட, தொடர் தீர்முடிவுகளில் இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டவாறு குற்றச்சாட்டுகளின் தகுதிப்பாட்டினையோ மற்றும்/அல்லது வழக்கின் குதிப்பாட்டினையோ உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டு அதிகாரவரம்பைச் செலுத்துவதைப் போன்றோ மற்றும்/அல்லது விசாரணை நடத்துவதைப்போன்றோ ஆராயத்தேவையில்லை. மு.த.அ.-இலுள்ள சங்கதி சார்ந்த உள்ளடக்கங்கள், இது கைது செய்வதற்குரிய குற்றமா, இல்லையா என்பதைத் தெரிவிக்கின்றனவா? என்பது குறித்து ஆராயும்பொருட்டு (மேற்கண்ட) **தினேஷ் பாய் சாந்து பாய்பட்டேல்** - எதிர் குஜராத் மாநில அரசு என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டபடி, உயர்நீதிமன்றம், ஒரு புலனாய்வு முகமையாகவோ அல்லது ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றம் போன்று அதிகாரங்களைச் செலுத்தியோ ஒருபோதும் செயல்படமுடியாது. மேலும் அப்பிரச்சினையானது, மு.த.அ.-இன் உள்ளடக்கங்களையும் முதல்நிலைச் சான்று ஏதுமிருப்பின் அதனையும், சான்று தேவையில்லாததையும் கருத்திற்கொண்டு, அந்தப் பிரச்சினையை ஆராயவேண்டும் எனக்கருத்துரைத்து, தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், உயர் நீதிமன்றம் சாட்சியத்தை மதிப்பீடு செய்யவோ, மு.த.அ.-இன் உள்ளடக்கங்களிலிருந்தும், சார்ந்திருக்கும் ஆதாரத்திலிருந்தும் அதனுடைய சுயஅனுமானங்களைக் கொள்ளவோ இயலாது. மேலும் அத்தகையதொருநிலையில், அதனை ஆராய்வது புலனாய்வு அதிகாரியின் கடமையாகிவிடுகிறது, அதன் பிறகு, எந்தளவுக்கு எவ்வாறு ஒரு ஆதாரத்தின் மீது நம்பிக்கைவைக்க இயலுமோ அந்த ஆதாரத்துடன் குற்றஅறிக்கையைத் தாக்கல் செய்தவுடன் நீதிமன்றம் சட்ட வினாக்களை ஆராயவேண்டும் என்றும் கருத்துரைக்கப்பட்டது.

9.2. **(மேற்கண்ட) துருவராம் முரளிதர் சோனார் - எதிர் மகாராஷ்டிர மாநில அரசு** என்ற வழக்கிலும் **(மேற்கண்ட) ஹரியானா மாநில அரசு - எதிர் - பஜன்லால்** என்ற வழக்கிலும் இந்த நீதிமன்றத்தின் தீர்முடிவுகளைப் பரிசீலித்த

பிறகு, வழக்கு நடவடிக்கைகளை நீக்க, கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்துவது என்பது ஒரு விதிவிலக்கேயன்றி, அது விதியல்ல என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழான உள்ளுறை அதிகாரம் பரந்திருந்தாலும், அதனைச் செயலுறுத்துவது குறித்து குறிப்பாக பிரிவிலேயே வகுத்துரைக்கப்படும் ஆய்வுகளைக் கொண்டு போதிய விளக்கமளிக்கப்படுகிறபோது தான் அது அரிதாகவும், கவனமுடனும், எச்சரிக்கையுடனும் செயலுறுத்தப்பட வேண்டும் எனக் கருத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் சாட்சிய மதிப்பீடு, கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்தி நடவடிக்கைகளை நீக்கும் கட்டத்தில் அனுமதிக்கத்தக்கதல்ல எனக் கருத்துரைக்கப்பட்டு உள்ளது. இதில் மேலே குறிப்பிட்டுள்ள **(மேற்கண்ட) சி.பி.ஐ.-எதிர்-அரவிந்தகண்ணா, (மேற்கண்ட) தெலுங்கானா -எதிர்-மேனேஜிபேட்** என்ற வழக்குகளிலும், **(மேற்கண்ட) எக்ஸ்.ஒய்.இசட்-எதிர்-குஜராத் மாநில அரசு** என்ற வழக்கிலும் இந்த நீதிமன்றத்தால் ஒருமித்தக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

9.3. கையிலுள்ள வழக்கின் சங்கதிகளுக்கு மேற்கூறிய தீர்முடிவுகளில் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டத்தைப் பொருத்திப் பார்த்தால், உயர் நீதிமன்றம் கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்தி, குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியதில் அதன் அதிகாரவரம்பை மீறி செயல்பட்டுள்ளது என நாங்கள் கருதுகிறோம்.

10. விசாரணை சமயத்தில் ஆராய்வதற்கும், பரிசீலிப்பதற்கும் வேண்டிய மிகக் கடுமையாக விசாரிக்கத்தக்க பிரச்சினைகளும்/குற்றச்சாட்டுகளும் உள்ளன என்னும் சங்கதியை மதிப்பிடவும், பரிசீலிக்கவும் உயர்நீதிமன்றம் தவறிவிட்டது.விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட மிக முக்கியமான அம்சங்களை உயர்நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது.2-ஆவது எதிரியான மம்தா குப்தா மற்றும் முன்னிதேவியின் கூட்டுச் சான்றளிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தின்படி 2-ஆவது எதிரியான திருமதி.மம்தா குப்தா ரூ.25 இலட்சம் செலுத்தியதையடுத்து, அவருக்கே உடைமை மாற்றப்பட்டுவிட்டது என்னும் சங்கதி கடுமையாக எதிர்த்துரைக்கப்பட்டுள்ளது என்பதை உயர்நீதிமன்றம் மதிப்பிட்டு பரிசீலிக்கத் தவறிவிட்டது என்பது 27.10.2010-ஆம் தேதியன்று

பதிவுசெய்யப்பட்ட விற்பனை உடன்படிக்கையில், விற்பனைத்தொகை ரூ.25 இலட்சம் என்றும், திருமதி.முன்னிதேவிக்கு ரூ.25இலட்சம் செலுத்தியது குறித்த குறிப்பீடு இல்லை என்றும், உடைமை ஒப்படைப்பு குறித்த குறிப்பீடும் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும். எனினும், ஒரே தேதி கொண்ட அதாவது 27.10.2010 அன்றான கூட்டுச் சான்றளிக்கப்பட்ட பிரமாணப்பத்திரத்தின் கிரையத்தொகை ரூ.35 இலட்சம் என்றும், அதில் ரூ.25 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. மேலும் 2-ஆம் எதிரிக்கு உடைமையை மாற்றஞ்செய்த குறிப்பீடு உள்ளது. ரூ.25 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை விசாரணையின்போது எதிரி நிலைநாட்ட வேண்டும். ஏனென்றால் எதிரிகள் மேற்படி ஆவணத்தைச் சார்ந்து நின்றதோடு, 27.10.2010-ஆம் தேதியிடப்பட்ட கூட்டுச் சான்றளிக்கப்பட்ட பிரமாணப்பத்திரத்தில் ரூ.25 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.முதல் விற்பனை உடன்படிக்கையில் கிரையத்தொகை ரூ.25 இலட்சமாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது, மேலும், காசோலைகள் மூலம் தொகை ரூ.10 இலட்சம் செலுத்தப்பட்டதற்கான குறிப்பீடு உள்ளது என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.இது பதிவு செய்யப்பட்ட ஆவணமாகும். மேற்சொன்ன அனைத்தும் விசாரணை சமயத்தில் பரிசீலிக்கப்படவேண்டிய விசாரிக்கத்தக்க பிரச்சினைகள்/குற்றச்சாட்டுகள் ஆகும். உயர் நீதிமன்றம் விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட சான்றாதாரத்தை கவனிக்க மற்றும்/ அல்லது பரிசீலிக்கத் தவறிவிட்டது.

11. தற்போது, இ.த.ச., பிரிவு 406-இன் கீழான குற்றத்திற்கான நிகழ்வு எதுவும் மெய்ப்பிக்கப்படவில்லை என உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவினைப் பொறுத்தவரை, 27.10.2010-ஆம் தேதியிடப்பட்ட கூட்டுச்சான்றளிக்கப்பட்ட பிரமாணப்பத்திரம் கடுமையாக எதிர்த்துரைக்கப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றமே கவனித்திருந்தாலும், உயர் நீதிமன்றத்தின் கருத்துப்படி, அது உரிமையியல் நடவடிக்கைகளில் பரிசீலிக்கப்பட வேண்டியதாகிறது.அங்குதான் உயர் நீதிமன்றம் பிழை புரிந்துவிட்டது.

கூட்டுச் சான்றளிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மேற்படி பிரமாணப்பத்திரத்தைப் பொறுத்தவரை, இ.த.ச.,பிரிவுகள் 467,468,471 ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்காக எதிரிகளுக்கு எதிராக மற்றொரு மு.த.அ. தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க உயர் நீதிமன்றமும் தவறிவிட்டது. மேலும் எதிரிகளின் கூற்றுப்படி, உடைமையும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. எனினும், கூட்டுச்சான்று அளிக்கப்பட்ட பிரமாணப்பத்திரத்தில் ரூ.25 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டிருப்பது கடுமையாக எதிர்த்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.2 இலட்சம் கொண்ட 5 காசோலைகளுள் ஒன்று மதிப்பு மறுக்கப்பட்டதாகும், எதிரிகளின் கூற்றுப்படி, அவர்கள் உடைமையை (கடுமையாக எதிர்க்கப்பட்டுள்ளது) ஒப்படைத்துவிட்டனர், அதாவது, சொத்தை ஒப்படைத்துவிட்டதாகவும் சொல்லலாம்.ஆகவே, இ.த.ச., பிரிவு 406-இன் கீழான குற்றத்திற்கான எந்த நிகழ்வும் நிறுவப்படவில்லை என்று இக்கட்டத்தில் கருத்துரைப்பது ஏற்றதல்ல, மேலும், மேற்சொன்ன அம்சத்தை விசாரணையின் போதுதான் பரிசீலிக்க வேண்டும்.முதல் உரிமை வழக்கு முன்னிதேவியால் தாக்கல் செய்யப்பட்டது, அதன் பிறகு பிந்தைய உரிமை வழக்கு எதிரியால் அதுவும் நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவே தாக்கல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.குறித்தவகை நிறைவேற்றுகைக்கான உரிமை வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆவணத்தில் எதுவுமில்லை. ஆகவே, உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டு அதிகாரவரம்பைச் செயலுறுத்தியதைப் போன்றும் மற்றும்/அல்லது விசாரணை நடத்துவதைப் போன்றும் குற்றச்சாட்டுகளின் தகுதிப்பாட்டினை ஆராய்ந்து, குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியதில் கடுமையான பிழைபுரிந்துள்ளது. உயர் நீதிமன்றம், கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்தி குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கியதில் அதன் அதிகாரவரம்பை மீறி செயல்பட்டுள்ளது.

12. முதன்மை முறையீட்டாளருக்கு வழக்குரை உரிமை ஏதுமில்லை என்று கருத்துரைத்ததில் உயர் நீதிமன்றமும் பிழை புரிந்துவிட்டது. முறையீட்டாளர், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிருரையுடன், பகர அதிகார ஆவணத்தையும் பதிவில் முன்னிடவில்லை என்ற ஊகத்தின் பேரில் மேற்கூறிய கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், முன்னிதேவி பகர அதிகார ஆவணத்தை நிறைவேற்றியிருக்கவில்லை எனக் குறிப்பாகத் தெரிவித்திருக்கும் போது, புலனாய்வு அதிகாரி புலனாய்வு நடத்தி, முறையீட்டாளர், எதிரிகள் மற்றும் தனிப்பட்ட சாட்சிகள் ஆகியோரின் வாக்குமூலங்களை பதிவு செய்தபிறகு, முறையீட்டாளர் பகர அதிகாரம் கொண்டுள்ளாரா? இல்லையா? என்பதை பின்னர் விசாரணையின் போதுதான் பரிசீலிக்கவேண்டும் என்பதாகும்.

13. மேற்கூறியதைக் கருத்திற்கொண்டும், மேற்கூறிய காரணங்களுக்காகவும், உயர் நீதிமன்றம், கு.வி.மு.ச.,பிரிவு 482-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்தி, குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கி பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு நிலைநிறுத்தத்தக்கதல்ல, அது தள்ளுபடி செய்து, நீக்கறவு செய்யத்தக்கதாகும். அதன்படி தள்ளுபடிசெய்து, நீக்கறவு செய்யப்படுகிறது.தற்போது, விசாரணையானது, அதனுடைய சுய தகுதிப்பாட்டின் பேரிலும் சட்டப்படியாகவும் மேல் நடத்தப்பட வேண்டும்.

தற்போதைய வழக்கு நடவடிக்கைகளில் இந்நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்ட கருத்துரைகள் கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழான நடவடிக்கைகளுக்கு மட்டும் உட்பட்டதாகக் கருதப்பட வேண்டும், மேலும், இதில் எங்களால் மேற்கூறப்பட்ட எந்தக் கருத்துரைகளின் தாக்கத்திற்கும் உட்படாமல், முன்வைக்கப்பட்ட சான்றின் அடிப்படையில், வழக்கினை அதன் சுயதகுதிப்பாட்டின் அடிப்படையிலும், சட்டத்தின் படியாகவும் விசாரணை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். அதன்படி இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு.தனஞ்ஜெய ஒய்.சந்திரசூட்

மாண்புமிகு நீதியரசர் திரு.எம்.ஆர்.ஷா

புதுதில்லி,

13.08.2021.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "